**குருநாகல் பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருநாகல் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, குருநாகல் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை முச்சக்கர வண்டி சங்க அனுமதிப்பத்தரக் கட்டணம் ரூபா 15,400 தொகை வரவு மற்றும் செலவு என 02 கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக இரண்டு கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறினை எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டின் கணக்கீட்டுக் குறைபாடுகளை சரி செய்யும் போது வருமான முற்பெறுவனவுகள் ரூபா | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 72,377 தொகை இரு தடவைகள் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணக் கணக்குகளின் கூட்டுத்தொகை மற்றும் மூலதனச் செலவுகளுக்கான அரசிறை உதவுதொகைக் கணக்கின் மீதியிடையே ரூபா 19,372,995 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 359,045 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பரிந்துரையின் படி அப்புறப்படுத்தியிருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 42,803 தொகை கணக்குகளில் இருந்து அகற்றியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | ஏற்பாட்டு அனுமதிப்பத்திரம் மற்றும் உள்ளூராட்சி குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2023 ஆண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 1,837,668 இற்கான கட்டிடங்களின் பெறுமதி மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 2023 ஆண்டில் சபை நிதியத்தில் இருந்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளின் பெறுமதி ரூபா 8,959,842 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2024 ஆண்டு செலுத்தப்பட்டிருந்த 2023 ஆண்டிற்குரிய பலவின கடன்கொடுத்தோர் ரூபா 103,080 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 527,810 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுதொகைக் கணக்கு அந்தப் | மிகையாக பதிவு செய்யப்பட்ட தவறு எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | 2023 ஆண்டில் சபை நிதிய கடன்கொடுத்தோர் ரூபா 1,000,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறைவாக கணக்கீடு செய்யப்பட்ட தொகை அட்டவணை தயாரிக்கப்பட்டு சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டு சபை நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த இரண்டு செயற்திட்டங்களுக்காக ரூபா 954,962 தொகை கடன் கொடுத்தோர் என மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட பல வேலை விடயங்கள் மேற்கொள்ளப்படாமையால் கடன் கொடுத்தோர் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த தொகையை விட குறைவாக கொடுப்பனவு செய்யப்பட்டதுடன், அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்த போது சில வேலை விடயங்கள் மேற்கொள்ளல் அத்தியவசியமற்றதாக காணப்பட்டதால் அந்தப் பகுதிகளை தவிர்த்து மதிப்பீடு தயாரிப்பதற்கு நேரிட்டது என. | - மேற்படி - |
| (ஔ) | 2017 ஆண்டின் வடமத்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களுக்காக கடன் கொடுத்தோர் என ரூபா 132,636 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதிகள் காணப்படின் அந்தப் பணத்தை முறைப் பிரகாரம் பதவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (க) | சபைக்குச் சொந்தமான மிங்கெட்டிய பொது நூலகம் மற்றும் தெமலுஸ்ஸ சனசமூக நிலையக் கட்டிடம் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் ரூபா 1,355,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ங) | ரூபா 100,000 தொகை பெறுமதியான காணியொன்று இரண்டு தடவைகள் காணி கட்டிடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ச) | சபைக்குச் சொந்தமான கல் உருளை மற்றும் சாக்கடை வண்டி டேலரின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9,500,000 தொகை மோட்டார் வாகனம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஞ) | மீளாய்வாண்டு மார்ச் 22 திகதி இயந்திரப் பொறியியலாளரினால் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் படி சபைக்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதி ரூபா 3,122,589 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ட) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,041,600 தொகை பெறுமதியான 04 இயந்திர உபகரண விடயங்களின் பெறுமதி இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ண) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 151,000 தொகை பெறுமதியான தண்ணீர் மோட்டர் மற்றும் கேட்போர்கூட உபகரணங்களின் பெறுமதி மற்றும் ரூபா 450,400 இற்கான தளபாட உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (த) | 05 நிகழ்ச்சித் திட்டங்கள் பொது பயன்பாட்டினுள் அடங்கியுள்ள மூலதன செலவுகளின் பெறுமதி ரூபா 1,613,975 தொகை அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ந) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,099,523 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி கூட்டுத்தொகை ரூபா 771,861,989 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட மீதிகள் மற்றும் அட்டவணைகளின் மீதிகளிடையே ரூபா 225,042,277 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அட்டவணை மற்றும் நிதிக்கூற்றின் மீதிகளிடையே இணக்கமின்மைகள் எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 172,058,063 தொகைக்கான 06 காணிகள் | அட்டவணை மற்றும் நிதிக்கூற்றின் மீதிகளிடையே இணக்கமின்மைகள் | வித்தியாசங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கட்டிடங்களிற்குரிய மீதிகள் மற்றும் கட்டிடப் பதிவேட்டில் / பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை இடையே ரூபா 36,926,969 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றின் படி உரிமைகளை ரூபா 1,307,503,157 தொகையாக காணப்பட்டதுடன், தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றின் படி பெறுமதி ரூபா 1,326,852,987 தொகையாக இருந்தது. அதன்படி, ரூபா 19,349,830 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அட்டவணை மற்றும் நிதிக்கூற்றின் மீதிகளிடையே இணக்கமின்மைகள் எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 286,580,953 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்ததது. | கண்டறிந்து எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | தேவையான எழுத்துமூல சான்றுகள் வழங்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571(2) | 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 9,339,313 | விண்ணப்பதாரிகளுக்கு தொலைபேசி மூலம் | பிரமாணங்களுக் கு இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இற்கான பலவின வைப்புக்கள் தொடர்பாக பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவித்து நினைவுபடுத்தல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளதுடன், முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளமையால் அதற்கான தீர்மானத்தின் படி அவர்களின் தீர்மானம் கிடைத்தவுடன் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 06 (ஆ) மற்றும் (இ) | 2023 ஆண்டின் போது புதுப்பிக்கப்பட வேண்டிய 11 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை புதுப்படுத்தி கட்டணம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை சபையினால் நிறைவேற்றியிருக்கவில்லை. | 2023 ஆண்டில் புதுப்படுத்தப்பட வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கையின் படி வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தில் பீடைகளை பரிசோதனை செய்யும் பிரிவு 100 | சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 07 வழக்கு அலுவல்கள் தொடர்பாக பீடைகளை பரிசோதித்து முறையான பரிகாரமொன்று எடுத்திருக்கவில்லை. | சபையினால் பொது மக்களுக்கு சேவைகளை வழங்கும் போது சட்டத்திற்கு இணங்க பொது மக்கள் செயற்படாத காரணத்தினால் ஏற்பட்டிருந்த நிலைமைகள் எனவும், அவை அவர்களினால் வேண்டுமென்றே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளாகும். | பிரதேச சபை அதிகார சட்டத்திற்கு இணங்க பீடைகள் பரிசோதனை செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 244,928,314 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 295,226,983 தொகையாக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டு முழுவதும் ரூபா 160 மில்லியனிற்கான சராசரி மீதியொன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த உயர்ந்த நலலொன்றினை சபை இழந்துள்ளது. | நிலையான வைப்புக் கணக்கு திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு வருமானம் ஒன்றை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றை கண்டறிந்து வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 11,244 | 17,358 | 16,851 | 12,791 | 16,860 | 19,241 | 12,199 | 12,532 |
| ii. | வாடகை | 1,253 | 2,455 | 2,269 | 238 | 2,460 | 1,855 | 1,803 | 52 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,201 | 2,761 | 2,761 | - | 1,975 | 2,781 | 2,781 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 125,405 | 385,438 | 312,424 | 190,180 | 145,328 | 183,149 | 58,897 | 124,252 |
| | மொத்தம் | 140,103 | 408,012 | 334,305 | 203,209 | 166,623 | 207,026 | 75,680 | 136,836 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 408 மில்லியன் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானம் | எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானம் அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவு உட்பட ரூபா 334 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்ாவாண்டு இறுதியில் ரூபா 203 மில்லியன் தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் 2018 ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டு வந்ததுடன், அதன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்துள்ளது. | வீதவரி பெறுமதி மதிப்பீடு திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருப்பதனால் அதன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | புதிய பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான வாடகைக்கு கொடுக்கக்கூடிய 99 சொத்துக்களில் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 48 சொத்துக்கள் மாத்திரம் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், மீதி 51 சொத்துக்களும் மீண்டும் டெண்டர் அழைக்கப்பட்டு அல்லது வேறுமுறைகளில் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் கிடைக்க வேண்டிய வருமானங்களை இழந்துள்ளது. | வாடகைக்கு கொடுக்கக் கூடிய சொத்துக்கள் அனைத்தும் மூன்று முறை டென்டர் பண்ணப்பட்ட போதிலும், டென்டர்தாரர்கள் எவரும் முன்வந்திருக்கவில்லை என. | வாடகைக்கு கொடுக்கக்கூடிய சொத்துக்களை வாடகைக்கு கொடுப்பதற்கு மற்றும் வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 காணி ஏலவிற்பனை தரகர் நிறுவனங்களுக்கு 04 காணிகளை துண்டுகளாக பகிர்ந்து விற்பனை செய்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப்பத்திரங்களின் துண்டு வரைபில் காணப்படும் குறைபாடுகளை சரி செய்து அந்த காணித் துண்டுகளை சட்டரீதியான செயற்பாடொன்றை கடைபிடிப்பதற்காக காணி ஏலவிற்பனையாளர்களினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்காததுடன், விற்பனை நாளாகிய 2024 பெப்ரவரி 15 திகதி அளவிலும் அந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட செயற்பாடுகள் எடுப்பதற்கு அல்லது அந்த ஏலவிற்பனை அலுவல்களை கட்டுப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | திட்டக் குழுவிற்கு சமர்ப்பித்து தீர்மானம் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறையான ஒழுங்குறுத்தலொன்று பேணிச் செல்லல் மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெல்லவ வர்த்தக கட்டிடத் தொகுதி நிர்மாணித்தலின் முதல் கட்டத்தின் உடன்படிக்கை பெறுமதி ரூபா 77,745,538 தொகை எனினும், இறுதி பில்பத்திரத்தின் படி மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 33,421,312 தொகையாக காணப்பட்டதுடன், உடன்பட்டிருந்த பெறுமதிக்கும் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதிக்கும் இடையே 57 சதவீத வித்தியாசம் ஒன்று காணப்பட்டதால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.3 இற்கு இணங்க மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது செயற்திட்டத்தின் அனைத்து வேலைகளும் உரிய முறையில் மதிப்பீடு தயாரித்திருக்காததுடன், கணியப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சிவில் வேலை விடயங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 2,810,889 தொகைக்கான 07 வேலை விடயத்தில் கருமங்கள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக தொடர்ந்தும் இந்த செயற்திட்டத்தை நடாத்திச் செல்லல் பிரதேச சபைக்கு அனுகூலமற்ற நிலை காணப்படுவதனால் இவ்வாறு 07 வேலை விடயங்களை நிறைவேற்றாமல் கைவிடுவதற்கும் 21 வேலை விடயங்களின் மதிப்பீட்டுத் தொகையை வரையறுப்பதற்கும் நேரிட்டது என. | மதிப்பீட்டின் படி வேலைப் பகுதிகளை விடயங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்படாத ரூபா 21,450,000 தொகைக்கான 12 நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | பொது மக்களின் வலுவான வேண்டுகோளின் படி விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டிய நிர்மாண வேலைகள் தொடர்பாக அங்கீகாரங்களை பெற்று மேற்கொள்ளப்பட்டது என. | தேவைப்பாடுகளை இனங்கண்டு பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |